ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

பராங்குசதாசரியற்றிய

# பராங்குசநாமப்பதிகம்.

திருப்போரூர்

## டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என் சி.

92

# விளம்பரம்.

## அற்புத பூலோகரம்பை கதை.


இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இதுவரையிலும் வெளிவந்திருக்கும் அராபிக்கதை, பாரீஸ்கதை, குலோபகாவலிகதை நான்குபக்கிரிகள் கதை இன்னும் சில சக்கிரவர்த்திகள் கதை முதலானதும் அவரவர்கள் வாசித்தும் பிறரால் செலக்கேட்டும் இருப்பீர்கள் ஆகையால் ஷை கதைகளைப்போன்ற ஆயிரம்கதைகளை ஒன்றுய்த்திரட்டி உருக்கிவார்த்ததைப்போல் இப்போது ஏற்படுத்தியிருக்கும் (அற்புத பூலோகரம்பைகதை என்னும் தலைப்புபெயர்கொண்ட ஷை கதையானது மானிடமென்னும் நமது அருமையான பிறவிக்கு கற்பகத்தருவைப்போல் கிடைத்திருக்கிறதென்றறிக இக்கதையை தாங்களே படித்தாவது பிறரால் சொல்லவாவது கேட்பீர்களாகில் இரும்பைக் காந்தமிழுக்கும் பாவனைபோல் ஐம்புலன்களையும் தன்வசத்தில் கிரகித்துக்கொள்ளுவது மன்றி ஆனந்தபரவசமாய் அவரவர் மனதை உருகச்செய்யுமென்பது திண்ணம் மேலும் இதில் அடங்கிய சாராம்சங்களை விவரிக்குமிடத்து மகாஅற்புதமாயிருக்கும் அதாவது.

ஐயாவே! இந்தக்கதையில் ஆங்காங்கு சந்திக்கும் நவரச அலங்காரங்களை முற்றும் விவரித்தெழுத இடமில்லாமையால் இம்மட்டில் விடப்பட்டது. கிளேஸ்காகிதத்தில் உயர்ந்த பயிண்டு செய்தது.

இதன் விலை ரூபா. 1 0 0.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.



பராங்குசதாசரியற்றிய

# பராங்குசநாமப்பதிகம்.

ஸ்ரீமன் முகுந்தனே பாற்கட லுதித்திடும் ஸ்ரீதேவி மணவாளனே, செங்கருடன் மீதேறி வந்தடியர் துயர் களைத் தீர்க்குமங் களரூபனே, காமனைப் பெற்றகெம் பிரவீ ரேழுலோ கங்களுக் கதிகாரனே, கமலதள நயன ஹரி வைகுந்த வாசனே கரிவரத கோவிந்தனே, சோம சேகரனமா ரயன்முனிவ ரனைவருந் துதிசெய்திடும்பா தனே, துஷ்டநிக் கிரகசிஷ்ட பரிபால பஞ்சவர் தூத னே மதுசூதனே, க்ஷேமந்த னைக்கொடுக்குந் தேவனே

யென்கொடிய தீவினை களையகற்றிச், சித்தம்வைத் தெ
ன்னோரட் சித்தாளிராமனே ஸ்ரீபராங் குசநாமனே. (௧)

மீனுருவெ டுத்துசோ முகனைவென் றயனுக்கு
வேதங்க ளைக்கொடுத்தாய், விகிதமுட னேமுதுகில்
மலையைச் சுமந்தன்று விண்ணவர்க் கமுதளித்தாய், மா
னிலந் தனைச்சுற்றி யோடுமவ னுக்காக வராகமா யவத
ரித்தாய், வண்டாரா யெபேரை தண்டிக்க நரசிங்க வாம
ன மாகவந்தாய், பானுகுல மதிலுரு தரித்துமே ராட்
சதப் பதர்களுட மதமறுத்தாய், பலராம ஸ்ரீகிருஷ்ண
கற்கியவ தாராயென் பாவமதை யேனறுக்காய், தீனஜன
வம்சானு கூலனே யென்கொடிய தீவினைகளை யகற்றிச்,
சித்தம்வைத் தென்னோரட் சித்தா ளிராமனே ஸ்ரீபராங்
குசநாமனே. (௨)

தாய்தந்தை குருதெய்வம் மற்றுமுற் றோர்களும்
தனயர்சம் ஸாரமுதலாய், சகலசம் பத்துமயில் வரியமு
ம்பூமியும் தனகனக வஸ்துக்களும், நீயேயென் றெண்
ணினே னுகையா லினிமீது நின்னடிசங் கீர்த்தனைகளை,
நிஜபக்தி யுடனனு தினமும்ப ஜிக்கவிந் நிலமதனில் வர
மளிப்பாய், ஆயிரங் கண்ணனுக் குகவிசெய் திடுமரி

அபயமென் றுனைய டைந்தேன் அகிலாண்ட கோடியிர் மாண்டநாயகா அவனிதனி லேயின்னமும், சேயனேக் கைசோர விடலாமோ வென்கொடிய தீவினைகளை யகற்றிச், சித்தம்வைத் தென்னைரட் சித்தாளி ராமனே ஸ்ரீபராங் குசநாமனே (௫)

அண்டமெல் லாமுண் டுமிழ்ந்தரெகு வீரனே அனுதினம் யானுமிந்த, அற்பசம் சாரத்தி லதிகோர துக்கமு மவஸ்தையென் னும்பலனையே, கண்டதே யல்லாது வேறுசுக மறிகிலேன் கத்தனே இனியென் பொலாக், காலமோ கண்ணனே உன்மனதென் மீதிறங் காதிருப்பது தர்மமோ, தொண்டருக் கன்பனுய் வந்துமவர் கேட்குஞ் சுகத்தைக் கொடுக்குமரியே, தொல்லுலகில் யெந்தனுக் குதவிநீ யென்றுயான் தூயபதமே பணிந்தேன், தெண்டனிட் டுண்மையாய் நம்பினே னென்கொடிய தீவினை களையகற்றிச், சித்தம்வைத் தெந்தனை ரட்சித்தா ளிராமனே ஸ்ரீபராங் குசநாமனே. (௬)

ஜானகி மனோகர தயாளகுண சம்பன்ன தஞ்சமென் றுனைய டைந்தேன், சகலபிணி களைநீக்கு வாயிந்த சம்சார சாகரந் தனிலுழன் று, யானலைவ துந்தனுக் கிது

தர்மமோ சொலாய் அம்புவியி லுன்பொன் னடிக், கடி யாயி ருக்கவருள் அருமறைகள் முறையிடும் ஆதிதேவ னே யின்னமும், ஈனரை யடுத்துசே விக்கவினி யெந்த னுக் கேனிந்த விதி விதித்தாய், இரவுபக லுந்தனை நம்பி னே னேழைக்கிரங்குமிப் பார்மீதினிற், றேநெழுகுநா மனே சீதராயென்கொடிய தீவினைக ளையகற்றிச், சித்தம் வைத் தென்னைரட் சித்தாளி ராமனே ஸ்ரீபராங் குசநா மனே. (ரு)

ஒருதரமி ராமாவென் றூல்சகலபாவமும் ஓடுமென் றேவேதமும், ஓலமிடு தாகையால் வுன்நாம கீர்த்தன மோதினே னின்ன மென்மேல், கிருபையிலை யோவுனக் கெள்ளளவு மறிகிலேன் கேசவா ஆசைகொண்டே, கிள் ளைபோல் ஒருவன்பான் கதறுவதை யன்புடன் கேட்ட ருளு மிப்புவியினில், மறுஜெனன மில்லாம லெந்தனுக் குதவிசெய் மகாயேழை யானுமிந்த மாயவலை யிற்சிக்கி மாண்டதினி போதும்யான் மகிழ்ச்சிபெற நிதமுமுனது, திருவடியே கெதியென் றிருக்கிறேன் யென்கொடிய தீவினைகளை யகற்றிச், சித்தம்வைத் தெந்தனை ரட்சித்தா ளிராமனே ஸ்ரீபராங் குசநாமனே. (சு)

அநுதினம் சகலசற் சனபரம பாகவதர் அபனர ன் தேவரின்னும், அருமையாய்த் துதிசெயுந் திருமந்திர மெனுமந்த அஷ்டா க்ஷரத்தையானும், கனவிலும் நினை விலும் மறவாதிருக்கநீ கடாட்சித்து வாழ்வை யருள் வாய், கங்கைதனை யீன்றசெந் தாளனே யென்மனக் கவ லைதனை யேனறுக்காய், இனமென்ன ஜாலமோ ஒன்று மறியக்கூட வில்லைநா னென்னசெய்வேன், இதுவென் னதஷ்டமோ இம்மைதனி லின்னமொரு இதரதெய்வங் களுண்டோ, தினமணி குலாப்தியே வந்துநீ யென் கொடிய தீவினை களையகற்றிச், சித்தம்வைத் தெந்தனை ரட்சித்தா ளிராமனே ஸ்ரீபராங் குசநாமனே. (எ)

பராங்குசநாமப்பதிகம்

முற்றிற்று.

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை, சூளை, போஸ்டைச்சேர்ந்த கானத்தியப்பமுதலி வீதி, 17-18வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோல்டன் அச்சுயந்திரசாலையில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஸ்கூல்புத்தகங்களும். அநேகவித மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைகளும்; அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ்ட்கியார்டு அளவுள்ள விநோதமாகிய பொட்டகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணா லேபில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

தேவையானவர்கள் அடியிற்கண்டிருக்கும் கம்பெனியாரவர்களுக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

**டி, கோபால் அண்டு கோ.**

கோல்டன் பிரஸ், சூளை போஸ்டு, மதராஸ்.